பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**09 09 2026 WEDNESDAY 6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** தமிழகம் உட்பட நான்கு மாநிலங்களின் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**2)** இந்த திட்டங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**3)** மாணவர்கள் கல்விக்கு இணையாக விளையாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை மாநில அமைச்சர் திரு ஆதவ் அர்ஜுனா வலியுறுத்தியுள்ளார்.

**4)** நெல் கொள்முதல் செய்வதில் தவெக அரசு அலட்சியம் காட்டுவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

**5)** உலக பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

தமிழகம் உட்பட நான்கு மாநிலங்களின் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான **10** ஆயிரத்து **21** கோடி ரூபாய்

மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், சேலம் — கரூர் — திண்டுக்கல் வழித்தடத்திலும், ஓசூர் — ஓமலூர் வழித்தடத்திலும் இரட்டைப்பாதை அமைப்பதற்கான திட்டமும் இதில் அடங்கும் என்று கூறினார்.

அரக்கோணம் — ரேணிகுண்டா இடையே மூன்றாவது மற்றும் நான்காவது வழித்தடத்தை ஏற்படுத்துவதற்கான திட்டமும் இதில் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் இந்த திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

இதன்மூலம், இம்மாநிலங்களுக்கு உட்பட்ட 17 மாவட்டங்கள் பயனடையும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இதற்கிடையே, தென்மாநிலங்களின் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

அளித்துள்ளது பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த திட்டங்கள் மூலம் 52 லட்சம் பேர் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

தவெக தலைமையிலான கூட்டணிக்கு மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றிக்கூட்டணி என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சென்னையை அடுத்த பனையூரில் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடரில் 57 துறைகளின் கீழ், ஆயிரத்து 117 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

இதில் 13 சட்ட மசோதாக்களும், ஒன்பது அரசினர் தனி தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28 நாட்கள் 178 மணிநேரம் 31 நிமிடங்கள் பேரவை நடைபெற்றதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

மாணவர்கள் கல்விக்கு இணையாக விளையாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை மாநில அமைச்சர் திரு ஆதவ் அர்ஜுனா வலியுறுத்தியுள்ளார்.

இன்று சென்னையில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மாநிலம் முழுவதும் இப்போட்டிகளில் பங்கேற்பதற்காக இதுவரை இல்லாத அளவிற்கு 26 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நெல் கொள்முதல் செய்வதில் தவெக அரசு அலட்சியம் காட்டுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவிரி டெல்டா மாவட்டங்களில் வீணாகும் நெல்மணிகளை பாதுகாப்பதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று குறை கூறியுள்ளார்.

இந்த மாவட்டங்களில் பெய்த மழை காரணமாக, நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டுவரப்பட்ட நெல் மூட்டைகள் முழுமையாக கொள்முதல் செய்யப்படாமல் சாலையோரங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்ததால் பாதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, விவசாயிகள் விளைவித்த நெல் மணிகளை முழுமையாக கொள்முதல்செய்து அவர்களின் நலனை தவெக அரசு பாதுகாக்க வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<>>>>>>

பொது இடங்களில் புகைபிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை தமிழகம் உட்பட அனைத்து மாநிலங்களும் தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பொது இடங்களில் புகை பிடிப்பதால் ஆண்டுதோறும் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பொது இடங்களில் புகைபிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்துள்ள போதிலும், அதனை செயல்படுத்தும் பொறுப்பு மாநில அரசுகளுக்குதான் உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், மாநில அரசுகள் இதனை முறையாக செயல்படுத்தவில்லை என்பதையே புள்ளிவிவரங்கள் எடுத்துரைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொது இடங்களில் புகை பிடிப்பதால் அதிக அளவில் பெண்களும், குழந்தைகளும்தான் பாதிக்கப்படுவதாகவும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

மேகதாது அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தை எதிர்த்து அஇஅதிமுக தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பினை சென்னை உயர்நீதிமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்துள்ளது.

தலைமை நீதிபதி திரு எஸ் ஏ தர்மாதிகாரி, நீதிபதி திரு அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இவ்வழக்கின் அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்ததையடுத்து, தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை இரண்டு முதல் நான்கு டிகிரி செல்சியஸ் உயரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 45 Sec.)***

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாநில அமைச்சர் திரு அருண்ராஜ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

சென்னை மாநகராட்சியின் பெருங்குடி மண்டலத்துக்கு உட்பட்ட பகுதியில் கட்டடப்பட்டுள்ள நாய்கள் இன கட்டுப்பாட்டு மையம் மற்றும் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையத்தினை மாநில அமைச்சர் திருமதி கமலி இன்று திறந்துவைத்தார்.

-----------------

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளியில் மாநில அமைச்சர் திருமதி ஜெகதீஸ்வரி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------

ராணிப்பேட்டை மாவட்டம் கீழாந்துரை கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாமினை ஆட்சியர் திருமதி பிரியா ரவிச்சந்திரன் இன்று தொடங்கிவைத்தார்.

-------------------

தூத்துக்குடி அரசு உயர் சிறப்பு மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின்கீழ், மோதிரங்கள் வைக்கக்கூடிய பாதுகாப்பு பெட்டகம் மற்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடுகளை ஆட்சியர் திரு விஷ்ணு மகாஜன் இன்று ஆய்வு செய்தார்.

-------------------

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

-----------------

திருப்பூரில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாநகர காவல்துறை ஆணையர் திருமதி ராஜேஸ்வரி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

நாமக்கல் மாவட்டத்தில் முட்டை ஒன்றின் பண்ணை கொள்முதல் விலை ஐந்து ரூபாய் 40 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலக பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் சீத்தல் தேவி தங்கப்பதக்கம் வென்றார்.

கலப்பு குழு பிரிவில் இந்தியா தங்கப்பதக்கத்தையும், வெண்கலப்பதக்கத்தையும் வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் Bhawna-வும், சரிதாவும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் தோமன் குமாரும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

----------------

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா **15-0** என்ற கோல் கணக்கில், சீன தைபே-ஐ வென்றது.

**Anmol Ikka** ஆறு கோல் அடித்தார்.

-----------

ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் லீக் ஆட்டங்களில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்தியா காலிறுதிக்கு தகுதி பெற்றது.

----------------

ஜப்பான் பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Takar Biri** மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், **21-18, 21-14** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Koki Ogawa**-வை வென்றார்.

-------------

ஆஸ்திரேலியா ஏ அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டித்தொடரில் பங்கேற்பதற்கான இந்திய ஏ அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<END>>>>>>**